


# “லம் வம் ரம் யம்”

# லிங்க பைரவி!

4

## மஞ்சுளா ரமேஷ்

லிங்கபைரவி பிரதிஷ்டை என்பதை இரண்டு நாளில் செய்தார் சத்குரு ஜக்கிவாசுதேவ். இரண்டு நாளும் பனி ரெண்டு மணி நேரத்திற்கு மேல் நடந்தது. அந்த சமயங்களில் அவர் நிறைய பேசி னார். தெய்வ பிரதிஷ்டை என்பது மட்டு மல்லாமல், தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களாக நிறைய சொன்னார். அத்தனை மணி நேரங்கள் எப்படி உட் கார்ந்திருந்தோம், நேரம் எப்படிப் போனது என்பதை இப்போது நினைக்கும் போது பிரமிப்பாகத்தான் இருக்கிறது.

முதல்நாள் பாதி அளவு முடியவே மணி அதிகாலை இரண்டு ஆயிற்று. நாங்கள் அனைவரும் கலைந்து சென்று, அவரவர் இடத்தில் தூங்கி, மறுநாள் ஆறு மணிக்கு எழுந்து விட்டோம். எல்லோரும் அவரவர் க்ரியைகள், தியானம், பயிற்சி என எல்லா இடங்களிலும் செய்துகொண்டிருந்தோம். உணவு சரியான நேரங்களில் அளிக்கப் பட்டாலும், பொழுபோக்காக கேன்டீனில் சுற்றினோம். யாருக்கும் உற்சாகம் குறை யவே இல்லை.

மதியம் மூன்று மணிக்கு பழையபடி அவரவர் இடத்தில் இருக்க வேண்டும் என்று சொல்லி இருந்தார்கள். ஐயாயிரம் பேர் வந்து அமர வேண்டும். எனவே இரண்டு மணியிலிருந்தே கியூவில் நின்று பைரவி கோயில் முன்பு அமர்ந்தோம்.

மூன்று மணிக்கு சத்குரு வந்தார், கழுத்தில் மாலையாக ஒரு பாம்பை சுற்றிக் கொண்டு! அது நாக்கை நீட்டி நீட்டி அவருடைய தோளில் நெளிந்து கொண் டிருந்தது. எல்லோரும் ‘ஹோ’ வென



கூச்சலிட்டார்கள். அவரோ அதை அன்போடு தடவிக் கொண்டே பேசினார். நிறைய பல விஷயங்களைப் பேசினார். அதேபோல சிவப்புத் துணியால் சுற்றப் பட்ட நீண்ட கம்பு போன்ற ஒன்றையும் தோளில் தூக்கிக் கொண்டு வந்தார்.

அதுவே அன்னையின் முதுகெலும்பாக பிரதிஷ்டை செய்யப்பட உள்ள 'ரஸதந்தா' எனப்படும் பாதரசம் நிரம்பிய செப்புக் குழல். அதனை விளக்கின் மேல் வைத்து முறையாக பூஜித்தார். பாம்பினை லிங்க பைரவியை மூடியிருந்த திரைக்குள் எடுத்துச் சென்றார். இந்த சமயத்தில் எல்லாம், அங்கே லிங்கபைரவியின் துதிகள் பாடல் களாக பாடப்பட்டு, நாங்கள் எல்லோரும் உற்சாகமாக திரும்பிப் பாடிக் கொண்டிருந் தோம்.

முதல்நாள் பாதரசத்தைக் கெட்டியான உருண்டைகளாக்கி, முக்கோண வடிவ உருளையில் மஞ்சள், குங்குமம், வேப்பிலை யுடன் சேர்த்து அளிக்கப்பட்டது. பிறகு அந்த உருளை பின்புறமாக இருந்த கிரேன் மூலம் தூக்கப்பட்டு பைரவியின் முக்கோண வடிவ கருவறையில் பொருத்தப்பட்டது. அதையெல்லாம் உற்சாகமான பாடல், பஜனைகளுடன் பார்த்தபோது, நாங்கள் எல்லாம் எங்களையே மறந்திருந்தோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்றைய தினம் 'ரஸதந்தா' எனப்பட்ட அந்த செப்புக் குழலை, சத்குரு ஏணியில் ஏறி முக்கோண செப்புப் பெட்டகத்தின் நடுவில் செலுத்தினார். அவருடைய வாய் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே இருந்தது. மேலே பொருத்தப்பட்டிருந்த மஞ்சள் நிற வெல்வெட் கூடாரத்தினை கற்பூரம் மூலம் எரித்து துளையுண்டாக்கினார். பிறகு தான் பிரதிஷ்டை செய்த உருளைக்குக் கற்பூர நீராஞ்ஜனம் செய்தார். அவர் மேலே நின்று அந்த கூடாரத்தின் நடுவில் நீண்ட ஆரத்திப் பாத்திரத்தில் கற்பூர ஆரத்தி சுற்றியபோது, சொர்க்க லோகம் போல இருந்தது. பாடல் களும் உச்சகட்டத்தில் முழங்கின.

இந்த சமயங்களில் சில செய்திகளைச் சொன்னார்... "பாம்பைப் பார்த்தால் நாம் பயப்படுகிறோம். பாம்புதான் இந்த பூமித் தாயின் சிறு சலனங்களைக் கூட உணரும் தன்மை கொண்டது. அதற்குக் காது கிடை யாது. உடலை முழுக்க இந்த பூமியில் படரச் செய்து ஊர்கிறது. எனவே உடல் முழுக்க உணர்வுமயமாக இருக்கிறது. கலிபோர்னியா வில் பத்து நாள் கழித்து பூகம்பம் ஏற்படும் என்றால் கூட அதற்கு இப்போதே தெரியும்! நமக்கு அதன் பாஷை தெரிந்தால் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

பூமியோடு நாம் தொடர்புடைய



நாகபந்தம்

வர்களாக இருந்தால் நம்மாலும் இவற்றை உணர முடியும். சக்தி செறிவூட்டப்பட்ட கோயில்களிலேயாவது, நாம் முழுக்க பூமியோடு இணைந்தால் அந்த சக்தியை நாம் பெற முடியும். அதற்காகத்தான் கோயில்களிலே சாஷ்டாங்க நமஸ்காரம் செய்யச் சொல்கிறார்கள். அந்த சமயங்களிலே எவ்வளவு குறைந்த ஆடையை அணிய முடியுமோ, அவற்றை அணிந்து கோயிலிலே பூமியிலே படர்ந்தால் அத்தனை சக்தியையும் பெற முடியும். அதற்காகத்தான் கோயில்களில், மேலே உடை அணியக் கூடாது என வலியுறுத்தப்படுகிறது.

பெண்களைக் குளித்து ஈரத் துணியோடு வரச் சொல்வதும் இதற்குத்தான். ஈரம் மின்சாரத்தை எப்படி ஈர்க்கும் என்பது நமக்குத் தெரியும். அதேபோல ஈரத் துணியிலே நமஸ்காரமோ, அங்கப்ரதட்சணமோ செய்யும்போது கோயில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சக்திகளை நம்மால் பெற முடியும்.

உத்தரகாசியிலே ஒரு சிவன் கோயில் இருக்கிறது. இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்பு பிரதிஷ்டை செய்யப்பட்டபோது எந்த அளவு சக்தி அதிர்வுகள் இருந்ததோ, அதே அளவு இன்றைக்கும் இருக்கிறது. அதை ஆரம்பத்திலிருந்து ஒரே குடும்பத்தினர் போற்றிப் பாதுகாத்து வருகிறார்கள். இப்படிப் பல கோயில்கள் இங்கு இருக்கின்றன. இதையெல்லாம் நாம் எப்படி உணர வேண்டுமோ அப்படி உணர வேண்டும்.

நாகங்கள் அப்படித்தான் சக்தி அதிர்வுகளை மிக அதிக அளவில் உணர்கின்றன. அதனால்தான் அதனை குண்டலினி சக்தியாக உருவகித்தார்கள். பல தெய்வங்கள் நாகங்களை அணிகலன்களாக அணிந்து இருக்கிறார்கள்.

நம்முடைய புராணங்களிலே நாக லோகம் பாதாளத்தில் இருக்கிறது என்கிறார்கள். 'அங்கோர்வாட்டில்' அதற்கான கோயில்கள் உள்ளன. இப்போதும் கும்பமேளாவில் 'நாகா' சாதுக்கள் ஆயிரக்கணக்கில் வருவதைப் பார்க்கலாம். அவ்வளவும் செறிவூட்டப்பட்ட சக்தி மயமானவர்கள்..."

இவற்றையெல்லாம் நமக்கு உணர்த்திக் கொண்டே பிரதிஷ்டைக்கான ஆயத்தங்களையும் முடித்தார். அவர் நாகங்களைப் பற்றிப் பேசியபோது,

**"நாக நாக நாகேந்திராய**

**நாக நாக நாகேந்திராய**

**கார்கோடக நாகேந்திராய**

**உலூபி நாகேந்திராய..."**

என்ற பாடலும் பாடப்பட்டது. அற்புதமான அந்த பஜன் பாடல்கள் இப்போதும் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. நடுநடுவில் எங்கள் அனைவரையும் கைகளை எதிரெதிர் திசையில் சுழற்றச் சொன்னார். அதற்கும் காரணத்தைக் கூறினார்.

"இந்தப் பேரண்டமே கடிகாரச் சுற்றாக, கடிகார எதிர்மறை சுற்றாக சுற்றிக் கொண்டு இருக்கிறது என்பதே நான்கு மாதத்திற்கு முன்புதான் எனக்குத் தெரியும். அமெரிக்காவில் ஒரு பிஸிக்ஸ் பேராசிரியரிடம் பேசிக் கொண்டு இருந்த போது அவர், "உங்களை நீங்கள் எப்படி உணர்வீர்கள்?" என்றார். நான், "எப்போதும் 'கிளாக்வைஸ், ஆன்ட்டி கிளாக்வைஸ்'ஸாக என்னுள் சக்தியை உணர்கிறேன்" என்றேன். அவர் சொன்னார், "இந்தப் பேரண்டமே அப்படித்தான் சுற்றிக் கொண்டு இருக்கிறது. அதனால்தான் ஒன்றை ஒன்று ஈர்த்துப் பிடித்து வைத்துக் கொண்டு இருக்கிறது" என்றார். அப்போது நான், "எனக்கு மேல் '∞' இதுபோல ஒருசலனம் இருப்பது போல உணர்வேன்" என்றபோது, "அதுதான் இந்த அண்டத்தின் முடிவற்ற (இன்பினிட்டி) தன்மையின் குறியீடு!" என்றார்.

நீங்கள் நாகங்கள் இணைந்திருப்பதைப் பார்த்தால் இந்த முடிவற்ற தன்மையை உணரலாம். இதை நீங்கள் பல கோயில்களிலே சிற்பங்களாக பார்த்திருக்கலாம். இங்கும் அந்த நாகபந்தத்தை உருவாக்கி இருக்கிறோம். லிங்க பைரவி கோயில் முழுக்க நாக சிற்பங்கள் இருந்தாலும், இதோ முகப்பிலே இரண்டு நாகங்கள் முடிவற்ற தன்மையிலே இணைந்திருப்பதைப் பார்க்கலாம்.

இந்த நாகங்களுக்கு மஞ்சள் பூசுவதன் மூலம் நாமும் அந்த சக்தியை, பந்தத்தை உணரலாம். யாரேனும் கணவன், மனைவி - தந்தை, மகள் - தாய், மகன் - நண்பர்கள் போன்றோர் நெருக்கமான உறவில் நீடிக்க





தேவிக்கு பூஜை

வேண்டும் என்றால் இதை ஒரு பூஜையாக இருவரும் சேர்ந்து செய்தால் அவர்களுக்குள் அந்த சக்திச் சலனம் ஏற்பட்டு, உறவு நீடிக்கும். இப்படிப் பல பூஜை முறைகளைக் கூட நாங்கள் உருவாக்கி இருக்கிறோம்...” என்றார்.

அவர் கழுத்தில் இருந்த நாகத்தை “இங்கே விடட்டா, அங்கே விடட்டா....” என்று நகைச்சுவையாகக் கேட்டுக் கொண்டே ஈஷா அன்பர் ஒருவரிடம் கொடுத்து எடுத்துப் போகச் சொன்னார். பிறகு பிரதிஷ்டையின் ஆயத்த வேலைகள் முடிந்த பிறகு, தன்னுள் சக்தியை உயர்த்திப் பலவிதங்களிலும் தன்னை வருத்திக் கொண்ட சத்குரு, திரைமூடிய லிங்கபைரவியின் அருகே சென்றார்.

இதற்கு முன்பே மேலே கபாலத்தில் அவர் ‘ரஸதந்தா’ வைத்து நீரூற்றிப் பூஜை செய்தபோது, அந்த நீர் வடிந்து, திரை சிலையோடு ஒட்டி ஒரு கண் மட்டும் தெரிந்து கொண்டு இருந்தது பார்க்கவே மெய்சிலிர்க்கும்படியாக இருந்தது. இப்போது சத்குரு சிலையின் அருகே சென்று கண்களில் நீர் வழிய வெண்ணிறத் திரையை விலக்க... மிகப் பெரும் கண்களுடன் ‘பளீரென’ லிங்கபைரவி வெளிப்பட்டாள். வெளியே அத்தனை டி.வி. திரைகளிலும் பளிச்சென பைரவி தோன்ற, ஐயாயிரம் பேரும் ஆனந்தக் கூச்சலிட்டனர்! அற்புதமாக கற்பூர ஆரத்தி செய்து தேவி தண்டம் சமர்ப்பித்தார் சத்குரு.

பிறகு அபிஷேக ஆராதனைகள். என்ன அழகாக நடந்தது என்கிறீர்கள். சிவப்பு உடை அணிந்து இரண்டு பெண்கள் ‘ஜல்ஜல்’லென நடனமாடி வர, இரண்டு பெண்கள் காவடி போல அன்னைக்குரிய அபிஷேகப் பொருட்களைத் தூக்கிக் கொண்டு வர, பாடல்கள் பின்னணியில் ஒலிக்க அபிஷேகம்... இப்போது ‘அயிகிரி நந்தினி’ ராகத்தில் பைரவி துதி....

திரை விலக்கும்போது மஞ்சளில், குங்குமத்தில், வெண்ணையில் என ஒவ்வொன்றிலும் லிங்கபைரவி ஜொலித்தாள். உடன் கற்பூர ஆரத்தி. ஆஹா, நாங்கள் யாருமே எங்கள் நினைவுடனே இல்லை. நேரம் நள்ளிரவைத் தாண்டி இரண்டையும் தாண்டி விட்டது. அந்த அபிஷேக ஆராதனைகளைக் காண எத்தனை ஜன்மத்திலோ புண்யம் செய்திருக்க வேண்டும். பெண்களே பைராகிகளாக இருந்து இந்த பூஜையை செய்தார்கள். இவர்கள்தான் பூஜையைத் தொடருவார்கள் என்றும் கூறப்பட்டது.

மூன்றரை மணிக்கு மேல் சத்குரு


லிங்கபைரவி ஊர்வலம்



கிளம்ப, நாங்களும் கலைந்தோம். மறுநாள் காலையில் இருந்து லிங்கபைரவியை கோயிலுக்குள் சென்று அனைவரும் வழிபடலாம் என்றார்கள். நான்கு மணிக்கு அறைக்குச் சென்ற நான் ஐந்தரை மணிக்குக் குளித்து விட்டு அவசரம் அவசரமாக கோயிலுக்கு வந்தேன். என்னைப் போல ஒரு நூறு பேர் வந்திருந்தார்கள்! வரிசையில் நின்று அந்த நேர்த்தியான கோயிலின் அழகை ரசித்தபடியே உள்ளே சென்று லிங்கபைரவியை ஆனந்தமாக தரிசித்து, அவள் எதிரேயே தேவி தண்டம் சமர்ப்பித்தேன்.

பத்துக் கைகளில் முத்திரைகளுடன், இரண்டு நீண்ட பெரிய விழிகள், நீண்ட மூன்றாவது கண், வைர மூக்குத்தி, இடது பக்கம் சுற்றும் வஸ்திரம் இவற்றுடன் நெருப்பு ஜ்வாலைகளின் நடுவே லிங்கபைரவி எழுந்தருளி இருக்கும் கோலம் அழகோ அழகு. அப்படி ஒரு ஈர்ப்பு சக்தி.

ஒரு சத்தம் இல்லை அங்கே! பைராகிகள் அன்போடு எங்களை வழி நடத்தினார்கள். அப்புறம் பார்த்தால் கும்பலோ, கும்பல்!


லிங்கபைரவி

பிறகு திருவிழாக் கொண்டாட்டங்கள். கிராமக் கோயில்களில் நடப்பது போல லிங்க பைரவி உற்சவ மூர்த்தியை அலங்கரித்து எடுத்து வர, அவளுக்கு முன் கம்பு நடனம், நெருப்பு நடனம் என ஒரே கோலாகலம். இரண்டு நாட்கள் இருந்த கட்டுப்பாடுகள் எல்லாம் தகர்ந்து, திருவிழாவில் வண்ண வண்ண உடைகளுடன் ஜாலியாக சுற்றினோம். அன்றையில் இருந்தே சிவராத்திரி கச்சேரிகளும் ஆரம்பித்து விட்டன.

. தியான லிங்கம் ஆன்மிக ஆர்வலர்களுக்கு மிகவுயர்ந்த அதிர்வலைகளைத் தருகிறது என்றால், லிங்கபைரவி இக்காலத்திற்கு மிகத் தேவையான ஆரோக்கியத்தையும், செல்வ வளத்தையும் தருபவளாக எழுந்தருளி இருக்கிறாள். பெண்மையின் முழுமையான தன்மையோடு அவள் பிரதிஷ்டை செய்யப்பட்டு இருப்பதால், பெண்மைக்கே உரிய தயையும், கருணையும் மிக அதிகமாகவே உண்டு.

அதே சமயம் சக்திக்கே உரிய வேகமும், வீர்யமும், ஆவேசமும் உண்டு. எனவே அவளை சரியாக உணர்ந்து பூஜிப்பவர்களுக்கு அவள் தன்னையே தருகிறாள். அப்படி ஒரு கருணாமூர்த்தியாக கோவையிலே வெள்ளியங்கிரி சாரலிலே குடி கொண்டு விட்டாள் லிங்கபைரவி.

இப்படி ஒரு சக்தி பிரதிஷ்டையை யாரும் அனைவருக்கும் முன்பாக செய்வதில்லை. என்ன செய்கிறார்கள், ஏன் செய்கிறார்கள் என்பதையும் விளக்க மாட்டார்கள். ஆனால் ஒவ்வொன்றையும் புரியுமாறு கூறி, நமக்கு எதிரேயே பிரதிஷ்டையும் செய்து, நம்மை ஆனந்தப் பரவசத்தில் சத்குரு ஆழ்த்தி இருக்கிறார் என்றால் அவர் எத்தனை கருணா மூர்த்தியாக இருக்க வேண்டும்!

அந்த பாக்கியத்தைப் பெற்ற நாம் இந்த கால கட்டத்தில் இருந்தோம், இந்த மகா பிரதிஷ்டையில் கலந்து கொண்டோம் என்பதே நினைத்து நினைத்து ஆனந்தப்பட வேண்டிய விஷயம்தானே! இந்த இறையருள் தொடரட்டும்.

லிங்கபைரவி நம்மை காக்கட்டும்!

**(நிறைவு)**